ISSN – 2454-3993

புறநானூற்றில் வாழ்த்தியல் துறை

முனைவர் வே.அ. பழனியப்பன்
உதவி பேராசிரியர்
தமிழ்த்துறை
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி

தலைவனை வாழ்த்திக் கூறுவது வாழ்த்தியல் என்னும் துறையாகும். தலைவனின் இயல்பை இயற்கையுடன் உவமித்து ஏற்றிக் கூறுவதும் அவனது இயல்பைப் புகழ்ந்துரைப்பதும் வாழ்த்தியல் என்னும் துறையின் பொருளாகும். புறநானூற்றில் இடம்பெற்றிருக்கும் வாழ்த்தியல் துறைப் பாக்கள் மன்னர்களின் இயல்பை எடுத்துக் கூறுவனவாக அமைந்துள்ளன. சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய மண் திணிந்த நிலனும்' என்னும் புறப்பாடல், சேரனின் இயல்பினை, ஐம்பூதங்களின் பண்புகளுடன் வாழ்த்திப் பேசுகிறது. சேரமன்னன் பொறுமை, ஆராய்ச்சி, ஆட்சித்திறன் அருள் ஆகியவற்றால் ஐம்பூதங்களையும் ஒத்தவனாவான் என்று குறிப்பிட்டு உலகில் எத்தகைய அறநெறிகள் திரிந்தாலும் உலகம் மன்னனையே பழித்துக்கூறும் என்பதால் அறநெறி குன்றாமல் ஆட்சி நடத்தல் வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

மண் திணிந்த நிலனும்
நிலம் ஏந்நிய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய் (புறம்.2:1-8)
பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்
நாஅல் வேத நெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலிஇயரோ அத்தை (புறம்.2:16-20)

பாண்டிய மன்னன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதியை இரும்பிடர்த்தலையார் என்னும் புலவர் பாடிய பாடலில் அவனது இயல்பினைக் குறிப்பிடுகின்றார். ‘‘காவல் முரசம் ஒலி எழுப்ப அருளோடு ஆட்சி நடத்திய பாண்டியர் மரபுடையவன். குற்றமற்ற கற்புடையாளின் கணவன் யானை மீது அமர்ந்து போர் செய்யும் வலிமை மிக்கவன் உலகமே பிறழ்ந்தாலும் சொன்ன சொல் மாறாதவன்’’ என்று குறிப்பிடுகிறார். வாழ்த்திக் கூறும் பான்மையில் மன்னனின் மரபு, வீரத்திறம், அரசாளுமை முதலான பண்புகள் தெளிவுபடுத்தப்படுகின்றன. (புறம்.3) கரிகிழார், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய பாடல் ஒன்றில் அவனை ஞாயிறும் திங்களும்போல் பூவுலகில் நிலைபெற்று வாழவேண்டும் என வாழ்த்துகிறார்

தண்கதிர் மதியம் போலவும் தெறுசுடார்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னுக பெரும நீ நிலமிசை யானே (புறம். 6:26-28)

சோழமன்னன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடிய பாடல் ஒன்றில் சோழனின் வீரப்பண்பினை எடுத்துக் கூறுகிறார். சோழனின் வீரமும் அவன் ஏறிப் பயணிக்கும் யானையின் சிறப்பும் எடுத்துக் காட்டப்படுகிறது.

இவன்யார் என்குவை ஆயின் இவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டுஎழில் மாலீபின்
மறலி அனன் களிற்றுமிசை யோனே
களிறே முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்
சுறவு இனத்து அன்ன வாளோர் எமாய்ப்ப
மரீஇயேனார் அறியாது மைந்துபட் டன்றே
நோயிலன் ஆகிப் பெயர்னகதில் அம்ம
பழன மஞ்தை உகுத்த பீலி (புறம்.13)

“சோழ மன்னனின் யானை கூற்றுவனை ஒத்தது. கடலில் செல்லும் கலம்போலவும் விண்மீன் கூட்டத்தில் உள்ள நிலவுபோலவும் விளங்குகிறது” என்ற பாடலில் யானையின் தெறல் குணமும் மன்னனின் ஆளுமைக் குணமும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ஔவையார். அதியமானைப் பாடும்இடத்து, அரிதான நெல்லிக்கனியை ஈந்த காரணத்தால் நீலமணிமிடற்றனான, சிவனைப் போல் வாழ வேண்டும் என்று வாழ்த்திக் கூறுகிறார்

வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி
பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே (புறம்.91)

பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிய பாடல் ஒன்றில் கடையெழு வள்ளல்கள், இறந்த காரணத்தால் அதனை ஈடுகட்டும் வள்ளலாக, குமணன் வந்துதித்தபான்மையைக் குறிப்பிடுகிறார். “பறம்பு மலையை ஆண்ட பாரியும், கொல்லி மலையை ஆண்ட ஓரியும், காரி ஊர்ந்த மலையனும், எழினியும், பேகனும், ஆயும், இறந்துப்பட்டனர். அவர்கள் இல்லாத குறையைத் தீர்க்கப் பிறந்தவன் குமணன் என்னும் செய்தி கூறப்பட்டுள்ளது. (புறம். 158) ஔவையார் சேரமான் பாரி வெண்கோவும் பாண்டியன் கானப்போர் தந்த உக்கிரப் பெருவழுதியும் சோழமன்னன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒன்றாக இருந்த காலத்துப் பாடிய பாடல் ஒன்று உலகின் நிலையாமையை உணர்ந்து அறச்செயல்களைச் செய்வதற்கு வலியுறுத்துகின்றது. மன்னனை, நீண்டகாலம் வாழ்க என்று வாழ்த்துவதுடன் அடைக்கலமாக வந்தவர்க்கு இரங்க வேண்டும் என்பதைப் பதிவு செய்துள்ளது. (புறம்.367) வாழ்த்தியல் பாடல்கள் மன்னனின் பண்பைக் கூறி வாழ்த்துவதைப் பொருளாகக் கொண்டுள்ளன. புலவர்கள் மன்னனை வாழ்த்துவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் அவர்களின் சினம் முதலான பண்புகளையும் பாடல்களில் எடுத்துக் கூறியுள்ளார்.